# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**ஆணை நாள்: 04.03.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண். SA8329/F/2023**

திரு. K.வெங்கடேசன் ... மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
முகையூர் (இ) மணம்பூண்டி,
விழுப்புரம் மாவட்டம் - 605 759. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **27/12/2022** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **03/02/2023** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **04/05/2023** |

******

## ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர் திரு.K.வெங்கடேசன் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி.T.பவனேஸ்வரி, பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், முகையூர் (இ) மணம்பூண்டி, விழுப்புரம் மாவட்டம் மாவட்டம். அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 27.12.2022 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், முகையூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சென்னகுணம் ஊராட்சி தொடர்பாக தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி முகையூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாரத பிரதமர் குடியிருப்பு திட்டத்தின் மூலம் இந்து ஆதிதிராவிடர் (SC) மக்களுக்கு 53 வீடுகள் வழங்கப்பட்டுள்ளது என்று பொதுத் தகவல் அலுவலர் தகவல் அளித்துள்ளார். இதில் வ.எண் 1ல் தொடங்கி வரிசை எண் 34 முடிய 34 பயனாளிகளுக்கு முதல் Stage. 2வது Stage மற்றும் 3வது Stage Bill வழங்கப்பட்ட பயனாளிகள் தொடர்பான தகவல்கள் மற்றும் பாரத பிரதமர் குடியிருப்புத் திட்டத்தின் மூலம் 2016 முதல் 2018 வரை 102 பயனாளிகளுக்கு தொகுப்பு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன, இதில் எத்தனை பயனாளிகளுக்கு முழு பில் வழங்கப்பட்டுள்ளது மற்றும் முகையூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சென்னகுணம் ஊராட்சியில் செயலாளராக பணியாற்றிய செந்தில் என்ற செந்தில்குமார் 12.01.1997 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தார் என்று பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்துள்ளார். இவர் பணியில் சேர்ந்த பொது எவ்வளவு மாத ஊதியமாக பெற்றார், 2022 ஆம் ஆண்டு பணி மாறுதல் பெற்ற பொழுது கடைசியாக அவர் பெற்ற மாத சம்பள பட்டிய நகல், எத்தனை முறை ஊதிய உயர்வு பெற்றார் என்பது போன்ற தகவல்களை 5 இனங்களில் தகவலாக வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தால், மனுதாரர் 03.02.2023 நாளிட்ட பிரிவு **19(1)-ன்** கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 04.05.2023 நாளிட்ட பிரிவு **19(3)இ**ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே 30.01.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல்கள் முழுமையான தகவல்களாக இல்லை என ஆணையத்தில் தெரிவித்தார். மேலும் உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, முழுமையான தகவல்களை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல்***

*அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA8329/F/2023</u>**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
முகையூர் (இ) மணம்பூண்டி,
விழுப்புரம் மாவட்டம் - 605 759.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**

திரு. K.வெங்கடேசன், த/பெ. குப்பன்,
மாரியம்மன் கோவில் தெரு,
சென்னகுணம் கிராமம் & போஸ்ட்,
கண்டாச்சிபுரம் தாலுக்கா
விழுப்புரம் மாவட்டம் - 605 755

Copy to: Judgement File/ Spare.
JE/PA 05.03.2025